உ

# யாழ்ப்பாணம் நல்லூர் நாயன்மார்கட்டு
# அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி
# பேய்ச்சி அம்மன் திருக்கோவில்

# பஞ்சதள இராஜகோபுரம்
# திருக்குடமுழுக்கு சிறப்பு மலர்

வெளியீடு - மலர்க்குழு

- 2020 -

யாழ்ப்பாணம் நல்லூர் நாயன்மார்கட்டு அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி
பேய்ச்சி அம்மன் திருக்கோவில் திருக்குடமுழுக்கு சிறப்பு மலர் - 2020
பக்கங்கள் 163, புத்தக அளவு - B5, பிரதிகள் - 500,
திருக்குடமுழுக்கு தினம் 30.01.2020, மலர்க்குழு: பேராசிரியர் அ.சண்முகதாஸ்
(தலைவர்), பேராசிரியர் முனைவர் ச.மனோன்மணி, முனைவர் திருநாவுக்கரசு
கமலநாதன் (செயலாளர்), முனைவர் சுகந்தினி முரளிதரன் (இணைப்பாளர்),
திரு. இ. அரசகுலசூரியர், திரு பரநிருபசிங்கம், இறையனார்.

# யாழ்ப்பாணம் – நாயன்மார்கட்டு
# ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலய அமைப்பு

திரு.சி.ரமணராஜா

## அறிமுகம்

நாட்டுப்புற மக்களினுடைய பண்பாட்டுப் பேணல்களில் நாட்டுப்புறத் தெய்வ வழிபாடுகளும் உள்ளடங்குகின்றன. நாட்டுப்புற மக்களினுடைய வழிபாடுகள் வைதிக மரபுக்குட்பட்டனவாகக் காணப்படுவதில்லை. இயற்கையோடும் இயற்கைக்கு அப்பாற்பட்டிருக்கும் அதீத ஆற்றல்களோடும் நேரடியாகவே தொடர்புகளை ஏற்படுத்திய முறைமையே நாட்டுப்புற வழிபாடுகளாக எம் பண்பாட்டில் இழையோடிக் காணப்படுகின்றது. நாட்டுப்புற மக்களின் மரபு வழிப்பட்ட வழிபாடுகளுக்குள் இனங்காணப்படுகின்ற சிறு தெய்வங்கள் சமுதாயப் பெறுமானங்களால் பெருந்தெய்வ வழிபாட்டு மரபுக்குள் உள்வாங்கப்பட்டு வளம் பெறலாயின. பெருமரபுக்குள் பெருவாரியான திருக்கோயில்கள் உள்ளீர்க்கப் படுவதற்கு ஆறுமுக நாவலரின் செயற்பாடுகளே ஊற்றுக்காலாக அமைந்திருந்தன. கிராமிய மக்களின் ஆன்மிகத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் தோன்றிய பேய்ச்சி அம்மன் இன்று இராஜராஜேஸ்வரி அம்பாளாக மாற்றம் பெற்றிருப்பதானது இவ்வாலயம் பெருமரபுக்குள் (Great Tradition) உள்வாங்கப்பட்டிருப்பதனையே வெளிப்படுத்துகின்றது. ஆரம்ப காலங்களில் மரவடிகளின் கீழ் உருவாகிய இவ்வாலயமானது திறந்த மண்டபக் கோயிலாக பின்னாட்களில் வளர்ச்சி கண்டிருந்தது. காலவோட்டத்தில் மக்களின் செயற்றிறன் வேகத்தினால் திருக்கோயிற் கட்டடக் கலைப் பரிமாணங்களினூடு பெரிய ஆலயமாக வளர்ச்சி கண்டிருக்கின்றது. இதனடிப்படையில் இவ்வாலயத்தின் அமைப்பினை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

## ஆலய அமைவிடம்

யாழ்ப்பாணம் - நல்லூர்ப் பிராந்தியத்தின் கிழக்குப் பகுதியாக அமைந்து விளங்கும் சிற்றூரான நாயன்மார்கட்டு எனுமிடத்தில் இவ்வாலயம் அமையப்பெற்றுள்ளது. அரசகேசரி மன்னன் இரகுவம்சம் என்னும் காவியம் இயற்றியமை, நாயன்மார் அறுபான்மூவர்க்கும் மண்டபம் அமைக்கப்பட்டமை போன்ற சிறப்புகளுடன்திகழும் இச்சிற்றூரின் கிழக்குப் பகுதியில் அரியாலை - நாயன்மார்கட்டுப் பிரதேசத்தினை எல்லைப்படுத்தும் பிரதான வீதியின் மேற்குப்புறத்தில் கிழக்கு நோக்கியதாக இவ்வாலயம் அமைந்துள்ளது. யாழ்ப்பாணம் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள J/94 கிராம சேவகர் பகுதியினுள் இவ்வாலயம் உள்ளது.

இவ்வாலயத்தின் கிழக்குப்பகுதியானது செம்மணி வயல்வெளியாகவும், பிரதான இரு சுடுகாடுகளைக் கொண்டதாகவும் காணப்படுகிறது. சுடுகாட்டினை நோக்கியபடி பேய்ச்சி அம்பாள் எழுந்தருளியுள்ளார். இவ்வாலயச் சூழல் ஆரம்ப காலங்களில் மக்கள் குடியிருப்புகளற்ற பரந்த வெளியாகக் காணப்பட்டிருக்கின்றது. இக்கிராமிய

மக்கள் வேளாண்மை, மந்தை வளர்ப்பு, வியாபாரம் முதலான தொழில்களை மேற்கொள்ளுமிடத்து அவர்களுக்கான ஆன்மிகத் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு இவ்வாலயம் தோற்றம் பெற்றிருக்கலாம். இதன் அமைவிடச் சிறப்பு இதனையே உணர்த்துகின்றது.

**திருக்கோயிலமைப்பு**

கோயில் எனப்பலரும் போற்றத்தக்க வடிவமைப்பினை ஆகம அடிப்படையில் கொள்ளுவதற்கு முன் தமிழ் நாட்டில் பல ஊர்களிலும் தம் மனப்போக்கிற்கு ஏற்ப சிறுசிறு கோயில்களை அமைக்க முயன்றுள்ளனர். அவ்வாறமைந்த கோயில்களில் வழிபடப்பட்ட சிற்றூர்ப்புறத் தெய்வங்கள் அல்லது தேவதைகள், திருமால், சிவன், சக்தி, கணபதி முதலான பெருந்தெய்வங்களுக்கு முன்னோடிகள் என்பது பலரும் அறிந்ததே.[1] சிற்றூர்ப்புறத் தெய்வங்களானவை மக்களின் அசைக்கவியலாத நம்பிக்கையின் அடியூற்றாய் அமைந்த தன்மையுடையனவாதலால் அபார ஆற்றல் வாய்ந்தவையாகக் காணப்பட்டன. எல்லைக்கற்கள், சூலங்கள், வேல்கள் முதலான வற்றைப் பண்டைய தமிழர்கள் தெய்வங்களாகப் போற்றி வழிபட்டு வந்தனர். தெய்வச் சூழமைவுகளுக்கு ஏற்பவும் சமூக உளவியற் சூழலுக்கு ஏற்பவும் கோயிலமைப்புகள் காலந்தோறும் வளர்ச்சியுற்றன.

பொதுவாகத் திருக்கோயில்களின் ஆரம்ப வரலாற்றினை அணுகும் போது, மரங்களின் நிழலில் தான் சிறுகோயிலமைப்பில் முதன்மைத் தெய்வங்கள் அமைந்திருந்தன எனக் கொள்ள முடியும். திருக்கோயிலின் வளர்ச்சிநிலை பற்றிய சிந்தனையில் எஸ். ஆர்.பாலசுப்பிரமணியம் பின்வரும் கருத்தினை முன்வைக்கின்றார்.

> " கிராம எல்லைக் கற்களும், மலையும், மரமும், காடும், பாம்பும், கருவிகளும் தெய்வங்களாகக் கொண்டாடப்பட்டன. தொழில்களிலும் நுண்கலைகளிலும் பண்டைத்தமிழர் தெய்வத்தன்மையைக் கண்டனர். பண்டைய கிராமத் தெய்வங்களின் கோயில்கள் மரங்களின் அடிகளில் செங்கற்களால் கட்டப்பட்டுத் தென்னங்கீற்றால் கூரை வேயப்பட்டனவாதலின் அவை குறிப்பிடத்தக்க கட்டடக்கலை நுணுக்கம் உடையன என்று கொள்ள முடியாது. பல்லவர் காலம் தொடங்கியே தமிழகத்தில் மேதக்க சீரிய கோயில்கள் எடுப்பிக்கப்பட்டன. அவைகளே தமிழகத்தின் வரலாற்றாராய்ச்சிக்குப் பெரிதும் உதவுவனவாகும்."[2]

எனும் கருத்து எம் கவனத்தைப் பெறுகின்றது.

நாயன்மார்கட்டு இராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்மன் ஆலயத்தின் ஆரம்பமானது மரவழிபாட்டில் தொடங்கி கோயிற்கட்டட அமைப்புகளைப் படிப்படியாக உள் வாங்கி வளர்ச்சி கண்டிருந்தது. இவ்வாலயச் சூழல் இன்று மக்கள் குடியிருப்புகளால் சூழப்பட்டிருப்பினும் (கிழக்குப் பக்கம் தவிர) தொடக்க நாட்களில் பரந்த வெளியா கவே காணப்பட்டிருந்தது. இச்சூழமைவில் இவ்வாலயத்தின் தோற்றம் குறித்துச் சிந்திக்கையில் இதன் ஆரம்பம் மரவடியாகவே இருத்தல் வேண்டும். இன்றும் தேவ சபையிலுள்ள படிமங்களுள் வேப்பமரத்தின் வேரிலிருந்து தோன்றிய அம்மனின் முக அமைப்பினை ஒத்த படிமம் ஒன்றினை ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக வைத்துப் பேணியும் வழிபாடாற்றியும் வருகின்ற தன்மையில் இது சாத்தியமாக இருக்கக்கூடும்.

தமிழகத்தில் மட்டுமன்றி ஈழத்திலும் திருக்கோயில் வழிபாட்டுத் தொடக்கம் மரங்களின் கீழேயே அமைந்திருந்தது எனலாம். காலவோட்டத்தில் கட்டடக்கலைப் பரிணாம வளர்ச்சியை, குறித்த தலங்கள் பெற்றிருந்த சூழலில் அத்தகைய மரங்கள் தலவிருட்சங்களாகச் சிறப்புப் பெறலாயின. ஆகவே இயற்கை வழிபாட்டின் தொடருறுத் தன்மைக்கு இவை சான்றளிக்கின்றன எனக் கொள்ளமுடிகின்றது.

திருக்கோயில்கள் என்பவை காட்சிப்பொருட்களாக அன்றி இந்துப்பண்பாட்டின் தனித்த அடையாளங்களாகவும், தெய்வநலப்பிழம்பு வெளிப்பட்டுத்தெரியும் புண் ணிய ஷேத்திரங்களாகவும், புனிதப் பயணங்களுக்கான கேந்திர நிலையங்களாகவும் திகழலாயின. இதனால் சமுதாய நடுவண்கள் என்ற அந்தஸ்தையும் திருக்கோயில்கள் பெறலாயின. எனவேதான் தம் மனம்போன போக்கில் திருக்கோயில்களை அமைத்துவிடலாகாது என்ற சிந்தனையின் நிமித்தம் கோயிலமைப்பு விதிகள் அமைக்கப்பட்டன.

அத்தகைய விதிகளானவை சிற்பசாத்திரங்கள் என்ற எல்லைக்குள் அமைந்துவிட்டன. ஆலயங்கள் அமைப்பதற்கென 32 சிற்பசாத்திரங்கள் விஷ்வகர்மாவினால் ஆதியில் கூறப்பட்டன என சிவாகமங்கள் இருபத்தியெட்டும் கூறுகின்றன என்பர். எனவேதான் திருக்கோயில் என்பது உயிர்ப்புள்ள தெய்வநலம் பொருந்திய சமயநிறுவனம் என்ற உணர்வு மக்கள் மனங்களில் பதிவாயின. சைவநாயன்மார்களின் பக்தியியக்கச் செயற்பாடுகளால் அவை சமூக மயப்படுத்தப்பட்டிருந்ததுடன் அவற்றின் முக்கியத்து வமும் நன்குணர்த்தப்பட்டிருந்தன.

> *"திருக்கோயிலிலுள்ளிருக்குந் திருமேனி தன்னைச்*
> *சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவனங்கே"*

என்கிறது சிவஞானசித்தியார்.

> "திருப்பதிகளிலுள்ள கோயில்களும் கோயில்களிலுள்ள வடிவங்களும்
> அருளாளர்களின் உறுதியில் ஒன்றித் திளைத்து நிற்போர்க்குக் கல், மண்,
> செம்பாகத் தோன்றா, அவை அவர்களுக்குத் தெய்வநல அழகாகவே தோன்றும்"[3]

என்று திரு வி.கல்யாணசுந்தரனார் குறிப்பிடுவதும் கவனித்தற்குரியது.

இதனடிப்படையில் திருக்கோயிற் கட்டடக்கலையின் பரிணாமத்தினை தமிழகச் சூழலில் வைத்து அவதானிக்கின்றபோது பலவகைச் சிறப்புகளுடன் வளர்ந்தமை யினை உணரலாம். பல்லவர் பாணி, சோழர் பாணி, பாண்டியர் பாணி, விஜயநகர நாயக்கர் பாணி, மராட்டியர் பாணி என்று தமிழகக் கட்டடக்கலையானது படிமுறை வளர்ச்சி கண்டிருந்தது. தமிழகச் சூழலில் மேற்படி பலவகைப் பாணிகளின் செல்வாக்குடன் ஆலயங்கள் பலவும் காலந்தோறும் எழுந்தன. ஆனால் ஈழத்துத் திருக்கோயிற் கட்டடக்கலை மரபானது தனக்கென தனித்துவமான பாணிகளைக் கொண்டிருக்கவில்லை. ஆயினும் தமிழக - ஈழத்துக் கலாசாரத் தொடர்புகளின் தாக்கம் மற்றும் செல்வாக்கினால் மேற்குறித்த பாணிகளின் பின்னணியிலேயே திருக்கோயில்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இவ்வகையில் ஈழத்திலுள்ள இந்துத்

திருக்கோயில்கள் யாவும் திராவிடக் கட்டடக்கலைப் பாணி மரபினை உள்வாங்கிய நிலையில் அமைந்துள்ளன எனலாம்.

திருக்கோயிலமைப்புப் பற்றி வரலாற்றியல் நோக்கில் அணுகுகின்றபோது முதலில் கருவறை தோற்றுவிக்கப்பட்ட பின்னரே ஏனைய பகுதிகள் அமைக்கப்படுவதுண்டு. கர்ப்பக்கிருகத்தைச் சார்ந்து அத்தகைய பகுதிகள் எழுவதுண்டு. இவை உடனடி யாகவோ அல்லது காலப்போக்கிலோ அமைக்கப்பட்டிருக்கும். இத்தகைய அமைப் புக்களைக் கூர்ந்து நோக்குகையில், கோயிற்கட்டடக்கலையின் பரிணாம வளர்ச்சிப் போக்கினைக் கண்டுகொள்ளலாம்.

இவ்வாலயத்தில் கர்ப்பக்கிருகத்துக்கு முன் அர்த்தமண்டபம் காணப்படுகின்றது. இவ்விரு பிரதான பகுதிகளையும் இணைக்கும் பகுதியாக அந்தராளம் என்பது அமைக்கப்படும். இப்பகுதிகள் தவிர மகாமண்டபம், ஸ்நபன மண்டபம், அலங்கார மண்டபம், வசந்த மண்டபம், யாகசாலை, வாகன மண்டபம் என் பனவும் காணப்படுகின்றன. பொதுவாக சாதாரண திருக்கோயிலமைப்பில் ஆறு மண்டபங்கள் அமைந்திருக்க வேண்டுமென சிற்பநூல்கள் கூறுகின்றன. ஆனால் அவ்வெண்ணிக்கையில் கூடுதல், குறைதலுண்டு என்பதனைப் பல்வேறு ஆலயங் களிலும் கண்டுணரலாம். இந்த ஆறு மண்டபங்களும் எவற்றை உணர்த்துகின்றன என்பது குறித்து கா.அருணாசலதேசிகர் குறிப்பிடும் கருத்தினைப் பின்வருமாறு அவ தானிக்கலாம்.[4]

| **இல** | **மண்டபங்களின் பெயர்கள்** | **பஞ்சகலைகள்** | **ஆறு ஆதாரங்கள்** | **அங்கங்கள்** |
|---|---|---|---|---|
| 01 | கர்ப்பக்கிருகம் | மூலப்பிரதி | ஆக்ஞை | சிரம் |
| 02 | அர்த்தமண்டபம் | சாந்தியாதீதை | விசுத்தி | புருவநடு |
| 03 | மகாமண்டபம் | சாந்தி | அநாகதம் | கண்டம் |
| 04 | ஸ்நபனமண்டபம் | வித்தியாசாலை | மணிபூரகம் | மார்பு |
| 05 | அலங்காரமண்டபம் | பிரதிட்டை | சுவாதிட்டானம் | வயிறு |
| 06 | சபாமண்டபம் | நிவிருத்தி | மூலாதாரம் | ஆசனம் |

“ஆலயம் தானும் அரனெனத் தொழுமே” எனும் மெய்கண்டார் கூற்று, முத்திக்குரிய வழியாகத் திருக்கோயில் வழிபாட்டை நோக்கி ஆற்றுப்படுத்துகிற கருத்தியலாகவே அமைகிறது. மெய்யியற்றளத்தில் பலவகை ஆன்ம சொரூபமாக ஆலயத்தை அணுகும் முறைமையுண்டு. ஒரே ஆன்மாவே அதன் அறிவு நிலையைப் பொறுத்தும், அது சார்ந்து நிற்கும் பொருளைப் பொறுத்தும் பூதான்மா, அந்தராத்மா, தத்துவாத்மா, சீவான்மா, மந்திரான்மா, பரமான்மா எனப் பலவகையாக அமைகிறது என்பது ஆகமங்களின் உட்கிடையாகும். இந்த ஆறுநிலைகளையும் உணர்த்துவதாக சிவாலயங்களிலுள்ள பின்வரும் பகுதிகளை எடுத்துக்காட்டி விளக்குவர்.

| | | |
|---|---|---|
| கோபுரம் | ஸ்தூலலிங்கம் | பூதான்மா |
| மகாபலிபீடம் | பத்திரலிங்கம் | அந்தராத்மா |
| கொடிமரம் | துவஜலிங்கம் | தத்துவான்மா |
| மூலவர் | சதாசிவலிங்கம் | சீவான்மா |
| ஆசாரியார் | ஆன்மலிங்கம் | மந்திரான்மா |
| பரவெளி | அகண்டலிங்கம் | பரமான்மா |

திருக்கோவிலின் வடிவ அமைப்பு மானுட உடலின் அமைப்புடன் ஒப்புமை யாக்கப்பட்டுள்ளமை, 'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்' என்ற திருமூலர் சிந்தனையை ஆதாரப்படுத்துவதாக அமைகிறது. திருக்கோயிலமைப்பு உடலின் மூல அமைப்பாகிய தத்துவங்களோடு ஒத்திருக்க வேண்டுமென்ற நியதியினடிப்படையில் சமயச் சான்றோர்கள் மானுட உடற்பகுதிகளை ஆலய உறுப்புகளுடன் பொருத்தி நோக்கும் கருத்தியல்களை முன்வைத்துள்ளனர். இந்தவகையில் மானுட உடல் மற்றும் திருக்கோயில் உறுப்புக்களைப் பின்வருமாறு ஒப்பிட்டு நோக்கலாம்.

சிரம் (தலை) - கர்ப்பக்கிருகம்
கழுத்து - அர்த்தமண்டபம்
மார்பு - மகாமண்டபம்
கைகள் - பிராகாரங்கள்
தொடை - நிருத்தமண்டபம்
முழங்கால் - ஆத்தான மண்டபம்
பாதங்கள் - மகாகோபுரம்

இவையன்றி வேறுவகையில் கோயிலுறுப்புக்களை மனித உறுப்புகளோடு தொடர்பு படுத்துவதுமுண்டு.

கர்ப்பக்கிருகம் - சிரசு
அர்த்தமண்டபம் - கழுத்து
மகாமண்டபம் - மார்பு
மணிமண்டபம் - வயிறு
உட்பிராகாரம் - தோள்கள்
இருபிராகார இடைவெளி - விலாப்புறம் மற்றும் கைகளுக்கு இடையிலுள்ள வெளி
பிராகாரப் பலதளிகள் - நாசிகள்
விக்கிரகம் - ஆன்மா
கர்ப்பக்கிருக நிலைத்தூண்கள் - கண்கள்
சுவர்க்கற்கள் - எலும்புகள்
தூண்கள் -நரம்புகள்
ஏழுமதில்கள் - இரத்தம், எலும்பு,சுக்கிலம், தசை, மச்சை, தோல் மூளை ஆகிய சப்த தாதுக்கள்.
ஐந்து பிராகாரங்கள் - பஞ்ச கோசங்கள்
மூன்று பிராகாரங்கள் - மூவகைச்சரீரம். (தூலம், சூக்குமம்,காரணம்)[5]

ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக நாயன்மார்கட்டு இராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் என அழைக்கப்படுகின்ற இந்த ஆலயமானது ஆரம்ப காலங்களில் "பேய்ச்சி அம்பாள் ஆலயம்" என்றே அழைக்கப்பட்டிருக்கிறது. அதேவேளை மரவடியின் (வேம்பு) கீழ் சிறியவுருவில் வழிபடப்பட்டு சிறிய கொட்டிலெனும் அமைப்போடு வளர்ந்திருக்க வேண்டும். பின்னாட்களில் சிறிய கர்ப்பக்கிருகம் நான்கு தூண்களுடன் கூடிய மண்டபமாக கிழக்கு நோக்கி அமைக்கப்பட்டிருக்கிறது. ஆலயச் சூழல், மக்களின் நம்பிக்கை, அவர்களது தேவைகளின் நிறைவேற்றம் மற்றும் சமூக பொருளாதாரக் காரணிகளின் செல்வாக்கு என்பவற்றினால் இவ்வாலயம் ஆகம மரபுக்குள் உள்வாங்கப்பட்டு திருக்கோயிற்கட்டடக்கலைக் கூறுகளுடன் பரிணாம வளர்ச்சி கண்டிருந்ததாகும். திருக்கோயிற் கட்டுமான வளர்ச்சியில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், தரிசனமண்டபம், முகப்பு மண்டபம், வசந்த மண்டபம், யாகசாலை, திருச்சுற்று, பலிபீடம், கொடிமரம், விமானங்கள், பரிகார மூர்த்திகளுக்கான ஆலயங்கள் மற்றும் கோபுரம் முதலான உறுப்புகளுடன் இவ் வாலயம் இன்று காட்சியளிக்கின்றது.

உள்திருச்சுற்றில் பிள்ளையார், முருகன், சிவன் (இலிங்கம்) அம்பாள், வைரவர், சண் டேஸ்வரி முதலான தெய்வங்களுக்கான பரிவார சன்னிதிகளுண்டு. வடகிழக்கு மூலையில் சேத்திரபாலகராக வைரவர் சன்னிதி காணப்படுகின்றது. அதற்கு வடக்குப் பக்கமாக யாகசாலை அமைந்துள்ளது. அதற்கருகில் தென்திசை நோக்கிய தன்மையில் வசந்த மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மேற்குப்புறத்தில் இரண்டு சிறு அறைகளுள்ளன.

கோபுர வாயிலுக்கு முன்னால் பிரதான வீதிக்கு கிழக்குப் பக்கமாக தேர்மண்டபம் உள்ளது. சிறியளவில் தேரடியில் வைரவர் எழுந்தருளியுள்ளார். தேர் மண்டபத்தின் கிழக்குப் பகுதியில் பெரிய அமைப்புடைய 'அட்சயசுரபி' அன்னதான மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இம்மண்டபம் அமரர் பொன் ஐயாத்துரை நினைவாக எடுப்பிக்கப்பட்டுள்ளது. அதன் தெற்குப் பகுதியில் பொங்கல் தேவையினை நிறைவு செய்வதற்கென சிறிய இடமுண்டு. இதனைப் 'பொங்கல் மண்டபம்" எனச் சுட்டுவர். முன்னாள் ஆலய பரிபாலனசபைத் தலைவர் தர்மலிங்கம் ஞாபகார்த்தமாக இம்மண்டபம் உள்ளது. இதன் தெற்குப் பக்கத்தில் சப்பைரத மண்டபம் காணப்படு கிறது.

**கர்ப்பக்கிருகம்**

திருக்கோயிலின் மிகப் புனிதமானதும் முக்கியமானதுமான பகுதி கர்ப்பக்கிருகமாகும். இதனை மூலஸ்தானம், கருவறை, திருஉண்ணாழிகை என்றும் குறிப்பிடுவர். திருக்கோயிலின் மூலவர் (மூலலிங்கம்) நன்கு நிலைநிறுத்தப்பட்டிருக்கும் இடம் கர்ப்பக்கிருகம் ஆகும். இதன் உட்பக்கச்சுவர்களில் சிற்பங்கள் செதுக்கப்படுவ தில்லை. ஆயினும் பல்லவர் காலத்துக் கோயில்கள் சில இதற்குப் புறநடையானவை.

மனித உடலுடன் திருக்கோயிலமைப்பினை ஒப்பிடுமிடத்து, தலையுடன் அது பொருந்தியமைகிறது. 'எண்சாண் உடம்புக்கு சென்னி சிறந்திடும்' என்பது போல

கர்ப்பக்கிருகம் திருக்கோயிலின் பிரதான பகுதியாகும். கர்ப்பக்கிருகத்தின் வெளிப் புறச்சுவர்களில் கோஷ்டங்கள் அமைந்திருக்கும். கர்ப்பக்கிருகமானது வட்டம், சதுரம் மற்றும் எண்கோண வடிவங்களில் அமைக்கப்படுவதுண்டு. தமிழகத்தில் வட்ட வடிவமைப்புடன் கூடிய கோவில்களைக் காணவியலுமாயினும் பெரும் பாலானவை சதுர அமைப்புடையனவே. ஈழத்திலுள்ள ஆலயங்கள் யாவும் சதுர அமைப்புடைய கருவறைகளையே கொண்டமைந்துள்ளன.

நாயன்மார்கட்டு பேய்ச்சி அம்பாள் ஆலய கர்ப்பக்கிருகமும் சதுர அமைப்புடையதே. கருவறை முழுவதும் பொழிந்த கற்களால் கட்டப்பட்டுள்ளன. கருவறையையும் அர்த்த மண்டபத்தினையும் இணைக்கும் பகுதி அந்தராளம் எனப்படும். ஆனால் இந்த ஆலயத்தில் அந்தராளம் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். கர்ப்பக்கிருகத்தின் தெற்குப் பக்க வெளிப்புறச் சுவரில் இரண்டும், மேற்குப்பக்க வெளிப்புறச் சுவரில் ஒன்றும், வடக்குப் பக்க வெளிப்புறச் சுவரில் இரண்டும் என எல்லாமாக ஐந்து தேவகோஷ்டங்கள் காணப்படுகின்றன. ஆனால் அவற்றில் தேவர்களின் சிற்றுருவங்கள் காணப்படவில்லை. கர்ப்பக்கிருகத்திற்கு மேலே விமானம் காணப்படுகிறது. சிகரம் மேலே செல்லச்செல்ல குறுகி இறுதியில் வட்டவடிவமாகிய ஸ்தூபியுடன் நிறைவு பெறுகிறது. விமானம் எனும் தலைப்பில் இவ்விடயங்கள் விளக்கப்பட்டிருப்பதனால் அவை குறித்து இங்கு விபரிக்கப்படவில்லை .

கருவறையின் மேற்குப்பக்கச் சுவருடன் பொருந்திய தன்மையில் மூலவர் படிமம் நிலைநிறுத்தப்பட்டிருந்தது. இம்முறையில் பெரும்பாலும் அகோரமுக வடிவப் படிமங்களே நிலைநிறுத்தப்படுவது வழமை. இந்நிலையில் மாற்றத்தை ஏற்படுத்திய பின்னர் கருவறையில் சக்தியின் சாந்த மூர்த்தமான மனோன்மணி அம்மன் படிமம் நன்கு நிலைநிறுத்தப்பட்டுள்ளது. வலது மேற்கரத்தில் செபமாலை, இடது மேற்கரத்தில் பத்மம், வலது முன்கரம் வரதகரம், இடது பின்கரம் அபயகரம் என்றவாறாக மனோன்மணியின் படிமம் அமைந்துள்ளது. அத்துடன் ஸ்ரீசக்கரம், மேருஜந்திரம் முதலியனவும் கருவறையில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

## மண்டபங்கள்

திருக்கோயில்களின் முக்கியத்துவம் மக்களால் நன்குணரப்பட்ட நிலையில் அவற்றின் விரிவுகளும் தவிர்க்கவியலாதவையாயின. இதனால் திருக்கோயிற் கட்டடங்கள் ஆலய சூழலுக்கேற்ப விரிவுபெற்றன. ஆலய உறுப்புகளுள் மண்டபங்களும் இன்றியமையாத இடத்தினைப் பெறலாயின. இந்தவகையில் காலந்தோறும் பலவகையினவாக மண்டபங்கள் எழுந்துள்ளன. இந்த ஆலயத்தில் ஏலவே கூறப்பட்டது போன்று அந்தராளம் காணப்படவில்லை. இப்பகுதி அர்த்தமண்டபத்தையும் கருவறையையும் இணைக்கும் பகுதியாகும். கருவறையையும் மகாமண்டபத்தையும் இணைக்கும் வகையில் அமைக்கப்படுவது அர்த்த மண்டபமாகும். இங்குள்ள அர்த்தமண்டபத்தின் இருபுறமும் சமய குரவர் நால்வரின் படிமங்கள் உள்ளன.

அர்த்த மண்டபத்தையடுத்து பெரியளவில் அமைக்கப்பட்டுள்ள மண்டபம் மகா மண்டபம் ஆகும். உற்சவ மூர்த்திகள் இங்குள்ள தேவசபையில் எழுந்தருளச் செய்யப் பட்டிருக்கின்றன. இந்தவகையில் புராதனகால தான்தோன்றி விக்கிரகம், வைரவர், கௌரி அம்பாள் முதலானவையும், பிள்ளையார், முருகன், சிவலிங்கம், மனோன்மணி அம்பாள், சண்டேஸ்வரி, அஷ்டதேவிகள், மாணிக்கவாசகர் முதலான படிமங்களும் காணப்படுகின்றன. முக மண்டபத்தினையடுத்து ஸ்நபன (தரிசன) மண்டபம் உள்ளது. இதன் முகப்புப் பகுதியில் 1999 ஆம் ஆண்டளவில் வரையப்பட்ட அம்பாள், பாலமுருகன், பிள்ளையார் ஆகியோரின் உருவங்கள் ஓவியமாக இன்றும் உள்ளன. இம்மண்டபத்திலே சிவன், அம்பாள் ஆகியோருக்கான சன்னிதிகளுண்டு. மேலும் இம்மண்டபத்திலுள்ள வடக்குப் பக்கச் சுவரில் சாமுண்டி, வராகி, இந்திராணி, வைஷ்ணவியும் தெற்குப்பக்கச் சுவரில் பிராம்மி, மகேஸ்வரி, கௌமாரியும் என்றவாறு அஷ்டதேவிகளும் ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன.

**பிராகாரங்கள்**

திருச்சுற்றாலை, ஆவரணங்கள் என திருக்கோயிலமைப்பில் சுட்டப்படுவன பிராகாரங் களாகும். திருக்கோயில்களில் திருச்சுற்றுக்களாகிய பிராகாரங்கள் விசாலமாகவும், சுற்றுச்சுவர்கள் உயரமாகவும் இருத்தல் சிறப்பான அம்சமாகும். திருக்கோயில் சார்ந்த வரலாற்றுப்பதிவுகளைக் கல்வெட்டுக்களாக இச்சுவர்கள் கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. மன்னர்கள், பிரபுக்கள், கொடையளிப்பாளர்கள், அரச அலுவலர்கள், ஏனையோர் வழங்கிய கொடையளிப்புகள், ஆலய நிர்வாகம் மற்றும் திருக்கோயில் உருவாக்கம் குறித்த தொல்மரபுக்கதைகள் முதலான விடயங்களை இச்சுவர்ப் பொறிப்புகளூடாகக் கண்டறியக்கூடியதாக இருக்கும்.

திருக்கோவிற்பிராகாரங்களில் பரிவாரத்தெய்வங்களுக்காக சன்னிதிகள் தனித்தனியாக எடுப்பிக்கப்பட்டிருக்கும் இத்தகைய சிறப்பினை பெரும்பாலான ஆலயங்களில் கண்டுணரலாம். கோயிலில் ஐந்து திருச்சுற்றாலைகள் இருப்பின் தத்துவ நோக்கில் அவற்றைக் கோசங்கள் எனக் கொள்வர். திருக்கோயிலிலுள்ள ஐந்தாம் ஆவரணத்தால் அன்னமய கோசமும், நான்காம் ஆவரணத்தால் பிராணமய கோசமும், மூன்றாம் ஆவரணத்தால் மனோமய கோசமும், இரண்டாம் ஆவரணத்தால் விஞ்ஞானமய கோசமும், முதலாம் ஆவரணத்தால் ஆனந்தமய கோசமும் அறியப்படும். கோயிலில் மூன்று பிராகாரங்கள் இருப்பின் அவை தூலம், சூக்குமம் என்னும் இரண்டு சரீரங்களையும் குறித்து நிற்கும். ஒரு பிராகாரமாய் இருப்பின் இவைகளெல்லாம் அவ்வொரு வீதியில் அடங்கும் என்கிறார் அச்சுவேலி ச.குமாரசாமிக்குருக்கள்.[6]

நாயன்மார்கட்டு இராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலயத்தில் இருபிரதான பிராகாரங்களூண்டு. இவ்விரு பிராகாரங்களையும் பெரிய, உயரமான சுவர் பிரித்து நிற்கின்றது. உள்வீதி, வெளிவீதி என அவை காணப்படுகின்றன. வெளிவீதியின் கிழக்கு மற்றும் தெற்குத் திசையில் பிரதான வீதிகள் (பயணிகள் பாதை) காணப்படுகின்றன. மேற்குத் திசையில் நாயன்மார்கட்டு சனசமூக நிலையம் அமைந்துள்ளது. இங்கு அமைந்துள்ள சனசமூக நிலையமானது ஆலயத்துக்கும் சமூகத்துக்குமான அறு

படாத தொடர்பின் பிணைப்பினை வெளிப்படுத்துவதாக உள்ளது. வடக்குப் பக்கம் வெறுவெளியாகவே காணப்படுகின்றது. இவ்வெளிப் பிராகாரமானது தேரோடும் வீதியாகும். பரிவாரத் தெய்வங்களுக்கான சன்னிதிகள் எவையும் இங்கு காணப்படவில்லை

உட்பிராகாரத்தில் பிள்ளையார், முருகன், நவக்கிரகம், வைரவர், சண்டேஸ்வரி ஆகிய தெய்வங்களுக்குப் பரிவார சன்னிதிகளுண்டு. தரிசன மண்டபத்தில் சிவன் அம்பாள் எழுந்தருளியுள்ளனர். இப்பகுதியின் நான்கு திசைகளிலும் தூண்கள் அமைந்துள்ளன. தூண்களை கால், தம்பம், கம்பம், கந்து, மதலை எனவும் வழங்குவர். திருக்கோயில்களை அமைக்கும் சந்தர்ப்பங்களில் சிற்பியர் தமக்கு முன்னுள்ள கலை மரபுகளையும் நடைமுறைகளையும் ஓரளவு பின்பற்றி வந்துள்ளனர். பொதுவாகத் தூண்கள் பலவகையினதாக அமைக்கப்படும் நிலையில் அவற்றைப் பாகுபடுத்திக் கொண்டுள்ளனர். இதன்படி இவ்வாலயத்திலுள்ள தூண்கள் சிறியளவிலான கோமுகைகளுடன் கூடியனவாகவும் மிக உயரமானவையாகவும் அமைக்கப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம். இவை அலங்காரத் தூண்களாகவோ, பலபட்டையமைப்புடைய தூண்களாகவோ, பத்தித்தூண்களாகவோ (நெருக்கமான வரிகள் கொண்டது), மாடக்குழித் தூண்களாகவோ, வேலைப்பாடுகளுடன் வனப்பாக்கிய தூண்களாகவோ, சிற்பத் தூண்களாகவோ, சுற்றுப்பட்டை வடிவத் தூண்களாகவோ, யாளித் தூண்களாகவோ, உருவங்களைக் கொண்ட தூண்களாகவோ அமைக்கப்பட்டிருக்கவில்லை. கீழே அகன்று மேலே சிறிது குவிந்துமுள்ளதான கோபுர அமைப்புத் தூண்களாகவும், எண்கோண வடிவமுடையனவாகவும் மற்றும் சில இடங்களில் சுவர்த்தூண்களாகவும் (அரைத்தூண்) இவ்வாலயத் தூண்கள் அமைந்துள்ளன.

**பலிபீடம்**

திருக்கோயிலமைப்பினை மனித உடலுடன் ஒப்பிட்டு நோக்கும் தத்துவார்த்த ரீதியிலான கருத்தியல் வெளிப்பாடுகள் உருவாகிய பின் 'மனிதனின் தொப்புள்' என உவமிக்கப்படுவது பலிபீடம். ஆன்மிக நிலையில் பலிபீடத்தின் முக்கியத்துவம் இதனால் உணரப்படும். பலிபீடம் என்பது திருக்கோயிற்கட்டட உறுப்புகளில் ஒன்று. பொதுவாக திருக்கோயில்களில் கொடிக் கம்பத்தினை அடுத்து அமைவு பெறுவது பலிபீடமாகும்.

பலியிடுதல் என்பதனை பொதுவழக்கில் உயிர்ப்பலியிடுதலை உணர்த்துவதாகக் கொள்வர். உண்மையில் அது ஏற்கத்தக்கதொன்றல்ல. பலி, பீடம் எனும் இரு சொற் சேர்க்கையே பலிபீடமாகும். பீடம் - இடம். பலி - படையல். ஆகவே ஆன்மா இறைவனை நோக்கி படையல் செய்யுமிடமே பலிபீடம் எனலாம். எதனைப் படையல் செய்தல் எனும்போது உணவு, மலர் என்பவற்றை வைத்து (படையலாக) வழிபாடாற்றக் கூடிய இடமாக அப்பீடம் அமைந்து விளங்கியிருக்கலாம். மிருகங்களைப் பலியிட்டு அவற்றின் உணவுகளைப் படைத்தும் வழிபாடுகள் இடம்பெற்றிருக்கலாம். நாட்டுப்புறவியல் வழிபாட்டு மரபில் அனைத்துத் தெய்வங் களும் உயிர்ப்பலி ஏற்கும் தெய்வங்களாகவே கருதப்படுகின்றன. இதனைப் பெரு

நிகழ்வாகக் கூடகொண்டாடுதலையும் அவதானிக்கலாம். ஆரம்ப நாட்களில் மிகச் சிறிய அளவிலான திருகோயிலாகக் காணப்பட்ட சூழலில் கருவறைகளில் மட்டும் பலிபீடம் இருந்திருக்க வேண்டும். பின்னாட்களில் திருக்கோயிற் கட்டடக் கலைக் கூறுகள் பரிணாம வளர்ச்சியுற்ற போது பலிபீடம் சுவாமி சன்னிதிக்கு வெளியே தனியான மண்டபமொன்றில் அமைக்கப்பட்டது எனக்கருதலாம்.

ஆன்மிகத் தேவையினை நம்பிக்கையினடிப்படையில் நிறைவு செய்ய முற்படு கின்ற போது திருக்கோயில்களில் ஊன்கலவாத உணவுகளையோ அல்லது உயிர்ப் பலியிட்டோ 'படையல் செய்து' வழிபாடாற்றும் மரபிலிருந்து 'பலிபீடம்' அமைக்கும் வழக்கம் திருக்கோயிற் கட்டடக்கலை அமைப்பில் உருவாகியனெக் கருதலாம்.

சிற்றறிவுடைய ஆன்மாக்கள் மலபந்தத் தொடர்பில் பலவாகிய தொழில்களை ஆற்றக் கூடிய வல்லமை கொண்டவை. அவற்றின் இன்பதுன்பங்களுக்கு மலபந்தத் தொடர்பே காரணம். ஆலய வழிபாட்டைப் பாசநீக்கத்துக்கான இடமாக சுட்டுணர்த்துகின்றன. தோத்திர, சாத்திர நூல்கள் திருக்கோயில்களில் வலம்வருமிடத்து ஆன்மாக்களிடமுள்ள காமம், குரோதம், மோகம், மதம், மாற்சரியம், உலோபம் முதலான தீங்குணங்கள் பலியிடப்படும் இடம் பலிபீடமாகும் என்பர் ஆன்றோர். மேற்படி தீங்குணங்களைப் பலிபீடத்தில் பலியாக வழங்கியதன் பின் பலிபீடத்தின் புறத்தே நின்று குறித்த தெய்வத்தை மனதில் தியானித்துக்கொண்டு அட்டாங்க வணக்கம் (ஆண்கள்), பஞ்சாங்க வணக்கம் (பெண்கள்) மேற்கொள்ள வேண்டுமென்பது மரபாகும்.

> " இது சிவசக்தி என்றும் பத்திரலிங்கம் என்றும் பாசம் என்றும் பொருள்படும். சிவசக்தியின் திருவருள் முன்னிலையால் காமம், வெகுளி, மயக்கம் ஆகிய தீய குணங்களை ஆன்மாக்களாகிய நாம் நீக்க வேண்டும் என்பதனையும், அப்போது தான் ஆணவம் நீங்கும் என்றும், ஆகவே ஆன்ம போதம் முதலிய தீய குணங்களைப் பலியிடும் படியும் குறிப்பாய் உணர்த்துவது"[7]

என்கிறார் சைவப்புலவர் கா.அருணாசலதேசிகர்

ஆகம விதிகளின் படி கோயில்களில் அமைக்கப்படும் பலிபீடங்கள் பலவகைப்படும். மூலமூர்த்தி, பரிவாரத் தெய்வங்கள், திக்குப்பாலகர்கள் எனத் தெய்வங்களின் தேவைக்கேற்ப பலிபீடங்கள் அமைவுபெறும். பெரும்பாலும் கருங்கற்களாலேயே பலிபீடங்கள் அமைவதுண்டு. 'பத்ம' வடிவில் அதற்கான உறுப்புக்களுடன் சிற்பக் கலைமரபில் அழகியலுணர்வுடன் கூடியதாக அமைக்கப்படும். இந்த ஆலயத்தில் மூலவருக்கு மட்டுமே பலிபீடம் உள்ளது. மூலாதாரத்துக்கு அடுத்து கொடிமரம், பலிபீடம், நந்தி என்பன முறையே அமைந்துள்ளன.

## கோபுரம்

கோபுரங்களை இராஜ(ச) கோபுரம் என்றே அழைப்பர். தென்னிந்தியக்கோயிற் கட்டடக்கலை வரலாற்றில் வானளாவிய கோபுரங்களை அமைத்து வரலாற்றுச் சிறப்புடையவர் கிருஷ்ண தேவராயர் ஆவார். காஞ்சிபுரம், சிதம்பரம், திருவானைக்கா, திருவண்ணாமலை முதலான தலங்களில் இவர் கட்டிய கோபுரங்களைக் காணலாம். ராயர் காலத்துக் கோபுரங்களே சொற்குறுக்கமடைந்து இராசகோபுரங்கள் என வழங்கப்பெறலாயின. இராசகோபுரம் பற்றிச் சிந்திக்கும் அருளாளர்கள் பலரும்

தமது சிந்தனைத்திறன் அருளியலியல்பு என்பவற்றுக்கேற்ப கருத்துக்களை வெளிப் படுத்தியுள்ளனர்.

"ராஜகோபுரத்தின் அருகில் வந்து அதன் அமைப்பைக் கவனித்துப் பார்த்தால் சில அதிசயங்கள் தோன்றும். கணக்கற்ற வடிவங்கள் அதன்கண் அமைக்கப் பெற்றிருக்கின்றன. அவைகளுள் மானுடவடிவங்களை ஏராளமாகக் காணலாம். அவர்களுடைய விதவிதமான வாழ்க்கை முறைகளும் அங்கு வடிவங்களில் விளக்கம் பெற்றிருக்கும். தேவர்களும் வேண்டியவாறு அதில் இடம்பெறுகின்றனர். தேவர் களின் செயல்களும் ராஜகோபுரத்தில் விளக்கப்பெற்றிருக்கின்றன. விலங்குகளும், பறவைகளும், ஏனைய சிற்றுயிர்களும் அதில் இடம்பெற்றிருக்கின்றன. பிரபஞ்ச அமைப்பில் இவை யாவுக்கும் இடமுண்டு என்பது கோட்பாடு. சிற்றுயிர்கள், பேருயிர்கள், விலங்கு இனம், மக்கள் இனம், தேவர் கூட்டம் ஆகிய எல்லோரும் பிரபஞ்சத்தில் இருக்கிறார்கள். அண்டத்தினுள் இன்னதுதான் இருக்கிறது இன்னது இல்லை என்று பாகுபடுத்த முடியாது. எல்லாப் படித்தரங்களிலும் உள்ள அனைத்தும் அங்கு இடம்பெற்றிருக்கின்றன. இக்கோட்பாட்டை இராஜகோபுரம் உருவகப்படுத்தியுள்ளது[8]"

என்கிறார் சுவாமி சித்பவானந்தர்.

கோபுரங்கள் இராசகோபுரம், வல்லாள மகாராசன் கோபுரம், கிளிக்கோபுரம், திரு மஞ்சனக் கோபுரம், கட்டைக்கோபுரம் (தெற்கு), கட்டைக்கோபுரம் (மேற்குக் கோபுரம்), அம்மணி அம்பாள் கோபுரம், கட்டைக்கோபுரம் (வடக்கு), கோபுரம் எனப் பலவகையினவாக எடுத்தாளப்படுகின்றன. திருக்கோயிலின் கோபுர அமைப்பானது நன்கு திட்டமிட்டு நீண்டகால அடிப்படையில் அமைக்கப்படும். திருக்கோயிலின் அமைப்புக்கு ஏற்ப பல்வேறு மாடங்களுடன் (நிலைகள்) கூடியதாகக் கோபுரங்களை அமைப்பர்.

திருக்கோயில்களில் தூலலிங்கம் என்று சுட்டுணர்த்தப்பெறுவது கோபுரம் ஆகும். தென்னிந்தியத் திருக்கோயிற் கட்டட அமைப்பில் சிறப்பான அம்சமாக இப்பகுதி அமைகிறது. திருக்கோயில்களின் பிரதானவாயிலில் மிகவும் பிரமாண்டமாக அமைக்கப்படும் விதங்களும் எண்ணிக்கையும் அத்தகைய கோயில்களின் பொருளா தார வசதியையும் அல்லது கோயிலமைப்போரின் விருப்பத்தையும் பொறுத்து அமையும். இதன் காரணமாக சில கோயில்களில் ஏககோபுரம் அல்லது துவி, திரி, சதுர், பஞ்ச கோபுங்கள் என அவற்றின் எண்ணிக்கை வேறுபட்டு அமையும். அவ்வாறே பரிவாரத் தெய்வங்களுக்கு ஏற்ப விமானங்கள் பலவாக அமைந்து விளங்கும்.

இராஜராஜேஸ்வரி ஆலயத்தில் ஏக (ஒன்று) கோபுரமும் அட்ட விமானங்களும் காணப்படுகின்றன. இவ்வாலயத்திலுள்ள கோபுரம் மிக அண்மைக் காலத்திலேயே அமைக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டு கோபுர திருப்பணி ஆரம்பிக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டு நிறைவுற்று மகாகும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. இப்பணி குறித்து ஆலயத்திலுள்ள கல்வெட்டினை பதிவுக்காகப் பின்வருமாறு நோக்கலாம்.

“ யாழ்ப்பாணம் - நாயன்மார்கட்டு அருள்மிகு இராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலயம், இராஜகோபுரத் திருப்பணி ஸ்வஸ்தி மங்கலகரமான துர்முகி வருடம் தைத்திங்கள் 27 ஆம் நாள் 09.02.2017 வியாழக்கிழமையும் பூச நட்சத்திரமும் கூடிய பகல் 12.30 மணியளவில் பரிபாலன சபை இணைச்செயலாளர் உயர்திரு கந்தையா சிவராசா ஆசிரியர் அவர்களினால் அடிக்கல் நாட்டப்பட்டு ஆலய பிரதமகுரு சிவாகம கிரியாரத்தினம் சிவஸ்ரீ சதா.மகேஸ்வரக்குருக்கள் J.P அவர்களால் சங்குஸ்தாபனம் செய்யப்பட்டு; பேச்சியம்பாள் அடியார்களின் நிதிப்பங்களிப்புடன், தமிழ்நாடு, நாகை மாவட்டம், சீர்காழி கொள்ளிடம் ஸ்தபதி க.புருஷோத்தமன் அவர்களினால் நிர்மாணிக்கப்பட்டு, நிகழும் மங்கலகரமான விகாரி வருடம் தைத்திங்கள் 16 ஆம் நாள் 30.01.2020 வியாழக்கிழமை உத்தரட்டாதி நட்சத்திர சுபவேளையில் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சதா. மகாலிங்க சிவகுருக்கள், ஆலயகுரு சிவஸ்ரீ மகேஸ்வரக்குருக்கள் பாலசதாசிவன் ஐயா ஆகியோரின் தலைமையில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்று பரிபாலன திருப்பணிச்சபை பொருளாளர் உயர்திரு இராசதுரை ஸ்ரீஸ்கந்தபாலன் அவர்களால் இராஜகோபுர கட்டட திரைநீக்கம் செய்யப்பட்டது.”

30.01.2020 ஆலய பரிபாலன திருப்பணிச் சபை என்றவகையில் அக்கல்வெட்டுக் காணப்படுகின்றமை குறிப்பிடற்குரியது. இராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலயத்தின் முகப்பில் வாயில் மற்றும் உபபீடத்துடன் கூடியதாக பஞ்சதள கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. கோபுர வாயிலின் இருமருங்கிலும் ஆறடி உயரமுடைய இரண்டு துவார பாலகிகளின் வடிவங்களுள்ளன. ஒவ்வொரு தளங்களிலும் இரண்டு துவார பாலகிகள் வீதம் எல்லாமாக பன்னிரு துவாரபாலகிகளின் வடிவங்கள் இக்கோபுரத்திலுண்டு. இவை மேலே செல்லச்செல்ல சிறிய வடிவமைப்பைப் பெற்றுள்ளன. பொதுவாக கோபுரத்தில் இறைவனுடைய பேராற்றலின் அறிகுறிகளான திருவிளையாடற் குறிப்புகள், லீலாவினோதங்கள் சிற்பங்களாகச் சித்திரிக்கப்படுவது கலைநயச் சிறப்பையளிக்கும். தேவர்கள், அட்டதிக்குப் பாலகர்கள், சூரிய சந்திரர் முதலியோரின் சிற்றுருவங்களும் அமைக்கப்படும். இதிகாசபுராண இலக்கியங்களின் செல்வாக்கினையும், அவ்வத் தலங்களுடன் கூடிய வரலாற்றுத் தொன்மைகளையும் கோபுரங்களில் சிற்பம்சமாகச் சித்திரிப்பதுண்டு.

திருக்கோயில்களின் இறைநிலைக்கு ஏற்ப தெய்வங்களுக்கான பராக்கிரம நிலைகள் வேறுபடும். அதாவது சிவன் கோயில்களில் சிவனது பராக்கிரமத்திற்கு முதலிடம் அளிக்கப்பட்டு ஏனைய தெய்வங்களுக்கு அடுத்த இடமும் வழங்கப்படும். இவ்வாறே தெய்வ பராக்கிரமங்கள் அவ்வத்தலங்களின் மூலவருக்கு ஏற்ப மாறுபட்டமைவதனைக் காணலாம். உபபீடத்தில் மனோன்மணி, நந்தி, விநாயகர், முருகன் ஆகியவுருவங்களும், மேற்றள மூலையில் பூதங்களின் உருவங்களுமுள்ளன. ஒவ்வொரு தளத்திலும் கோபுர தாங்கிகள் உள்ளன. அத்துடன் அம்மன் வடிவங்களான முத்துமாரி, ராஜராஜேஸ்வரி, எட்டுக்கைகளுடன் கூடிய காளி, கௌரிஅம்பாள், சிவகாமசுந்தரி, அர்த்தநாரீஸ்வரர், வைரவர் முதலான உருவங்களுமுள்ளன. மேலும் சாயப்பண்டிகையின் தெற்குப்பக்கம் இலக்குமியும், வடக்குப் பக்கம் சரஸ்வதியும் உள்ளனர்.

கோயிலில் அமைந்துள்ள கோபுரத்தின் உச்சியிலும் விமானத்தின் உச்சியிலும் கலசங்கள் வைக்கப்படும். இத்தலத்திலுள்ள விமானங்களில் தலா ஒவ்வொரு கலசங்கள் நிலை நிறுத்தப்பட்டுள்ளன. கோபுரத்தில் ஐந்துகலசங்கள் இடம்பெற்றுள்ளன. தேவ சபையிலுள்ள விமானத்தின் மூன்று கலசங்கள் இடம்பெற்றுள்ளன.

**விமானம்**

திருக்கோயிலின் கர்ப்பக்கிருகத்தின் மீது எழுப்பப்படுகின்ற கட்டட அமைப்பே விமானம் ஆகும். திருக்கோயிலில் கட்டடக்கலை அமைப்பில் மிக உயரமாக அமைக்கப்படுவன விமானமும் கோபுரமும் ஆகும். தென்னிந்தியக் கட்டடக்கலை மரபில் தஞ்சைப் பெரியகோவில் விமானம் கட்டடத்தின் புத்தாக்க கலைப் பரிமாணமே என விதந்து சுட்டற்குரிய தன்மையில் அமைந்து காணப்படுகின்றது.

விமானம் மற்றும் கோபுரத்தினை தூலலிங்கம் என்பர். பலிபீடம் பத்ரலிங்கமாகும். மூலமூர்த்தி சூக்குமலிங்கமாகும். இவ்வுண்மையை

"தூய விமானமும் தூலம தாகுமால்
ஆய சதாசிவ மாகுநற் சூக்குமம்
ஆய பலிபீடம் பத்திர லிங்கமாம்
ஆய அரணிலை ஆய்ந்து கொள்வார்கட்கே"[9]

எனத் திருமந்திரம் விளக்குவதனைக் காணலாம். கோயிலின் இருப்பிடத்தை வெகு தூரத்திலிருப்பவர்க்கு வெளிப்படுத்தும் இரு பிரதான பகுதிகளாக விமானமும், கோபுரமும் திகழ்கின்றன. ஏனெனில் இவையே ஆலயத்தின் மிகவுயர்ந்த பகுதிகளாகும். ஈழத்து திராவிடக் கட்டடக்கலை மரபில் விமானங்களைக் காட்டிலும் கோபுரங்களே மிகவுயர்ந்தவையாக அமைக்கப்படுவது மரபாகவுள்ளது.

விமான தேவதைகளைக் குறித்து ஈசான சிவகுரு தேவபத்ததி என்னும் நூல் பின்வரும் கருத்தினை முன்வைக்கின்றது.

" விமானச் சுவர்களில் எல்லாத் திசைகளிலும் கடவுட்படிமங்களை ஸ்தாபனம் பண்ணவேண்டும். தெற்கிலேதட்சணாமூர்த்தியையும், மேற்கிலேஇலிங்கோற்பவர் அல்லது விஷ்ணுவையும், வடக்கிலே துர்க்கை அல்லது பிரம்மனையும் தாபனம் பண்ண வேண்டும். அர்த்த மண்டபச் சுவரிலே விநாயகரையும் அதன் வடகிழக்கு மூலையிலே ஷேத்திர பாலகரையும் பிரதிஷ்டை பண்ணிக்கொள்ளலாம்."[10]

இவ்வாலயத்திலுள்ள விமானம் அதிகளவான உயரத்தைக் கொண்டிருக்கவில்லை. சதுர அமைப்பிலேயே காணப்படுகின்றது. விமானத்தின் வடக்குப்பக்க மேற்றளத்தில் காளி உருவமும், ஏனைய மூன்று திசைகளிலும் மனோன்மணி அம்பாளின் உருவமும் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இவை சாந்தமுகத் தோற்றமுடையவை. அவற்றுக்கிடை யில் ஒவ்வொரு திக்கிலும் இரண்டு (ரிஷப வாகனம்) நந்திகள் வீதம் எல்லாமாக நான்கு திக்கிலும் எட்டு நந்திகள் காணப்படுகின்றன.

மேலே ஒரு கலச முண்டு. விநாயகருக்கென அமைந்த பரிவாரக் கோயில் விமானத்தில் நான்கு திக்கிலும் எட்டு மூஷிகமும், வடக்குத் திசையில் சிவவடிவம், ஏனைய மூன்று திசைகளிலும் விநாயக வடிவமும் உள்ளன. முருகனுக்கென அமைந்த விமானத்தில் நான்கு திக்கிலும் எட்டு மயில்களும், கிழக்குப் பகுதியில் வள்ளி, தெய்வயானை சமேத முருக வடிவமும், வடக்கு மற்றும் தெற்குப் பகுதியில் பழனியாண்டவர் வடிவமும் மற்றும் நான்கு பூதங்களும் காணப்படுகின்றன. இந்த மூன்று விமான அமைப்புகளும் வெவ்வேறு வடிவமைப்புகளை உடையவை. மேலும் சண்டேஸ்வரி, வைரவர், நவக்கிரக மூர்த்திகள், ஸ்நபன மண்டபத்திலுள்ள சிவன், அம்மன் சன்னிதிகள் என்பவற்றிலும் சிறியளவிலான விமானங்களைக் காணமுடிகிறது.

பொதுவாக ஈழத்திலுள்ள திருக்கோயில் விமானங்களிலுள்ள தேவகோஷ்டங்களில் சாஸ்திர பிரமாணங்களுக்கு அமைய கடவுட்படிமங்கள் பிரதிஷ்டை செய்யப்படுவதனை அறிந்துணரலாம். விமான தேவதைகள் கர்ப்பக்கிருகத்தின் சுவர்களிலுள்ள தேவகோஷ்டங்களிலும் மேற்றளக் கோஷ்டங்கள் மற்றும் கிரீவத்தின் தேவகோஷ்டங்களிலும் அமைக்கப்படும். இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் கர்ப்பக்கிருகத்தின் வெளிப்புறச் சுவர்களிலுள்ள தேவகோஷ்டங்களில் விமான தேவதைகள் அமைக்கப்பட்டிருக்கவில்லை. மேற்றளங்களிலும் அதிகளவில் தேவதைகளின் சிற்றுருவங்கள் எவையும் காணப்படவில்லை.

## கோயில் மதில்

திருக்கோயில் கட்டடக்கலை அமைப்பினுள் மதில்களுக்கும் குறிப்பிடத்தக்க இடமுண்டு. திருக்கோயிலின் வளர்ச்சி நிலையின் ஓர் பரிணாமமாக இதனைக் கருதலாம். அவற்றின் பொருளாதார மற்றும் இட அமைவுகளுக்கேற்ப இதனமைப்பு அமையும். மேலும் செங்கல், களிமண், கருங்கல் முதலான பொருட்களால் மதில்கள் அமைக்கப்பெறும்.
இவ்வாலயத்தைச் சூழ உயரமான சுற்றுமதில் அமைக்கப்பட்டுள்ளது. கோயிலிலுள்ள கலைப்பொருட்கள், விக்கிரகங்கள் மற்றும் பெறுமதியான பொருட்களைப் பாது காக்க வேண்டிய பொறுப்புணர்வும் கடமையும் அப்பிராந்தியத்தில் வாழும் மக்களுக்குரியதாகும். இதனால் திருக்கோயில் சுற்றுமதில்களை மிக உயரமாக அமைப்பதுண்டு.

வெளிவீதியையும் உள்வீதியையும் பிரிக்கும் வகையில் மிக உயரமாக மதில் எடுப்பிக்கப்பட்டுள்ளது. அறுத்த சிமெந்துக்கற்களால் இம்மதில் அமைக்கப்பட்டுள்ளது. வெளிவீதி தனித்து நிற்கும் வகையில் இந்த மதிலுடன் கூடிய திருக்கோயிலமைப்பினை அவதானிக்க முடிகின்றது. பெரும்பாலும் கோயில் மதில்களின் மேற்புறத்தில் கோயிலை இனங்கண்டு கொள்ளும் தன்மையில் இறையியலுடனும், இயற்கையுடனும் தொடர்புடைய உருவங்களை அமைப்பதுண்டு.

## பிச்சாண்டவர் கோயில்

இவ்வாலயத்துக்கென அமைந்துள்ள அட்சயசுரபி அன்னதான மண்டபத்திற்கு வடக்குப் பக்கமாக பிச்சையுகக்கும் பெருமானுக்கு சிறிய கோயில் எடுப்பிக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் மிகச்சிறியளவில் அமைக்கப்பட்டிருந்த இவ்வாலயம் இன்று குறிப் பிடத்தக்கவகையில் சிறியளவினதாகவும் முருகியலுணர்வுடன் கூடியதாகவும் காட்சி யளிக்கின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் வேறெங்கும் காண முடியாதளவில் பிச்சாடனருக்கு தனியான கோவில் அமைக்கப்பட்டமையானது நாயன்மார்கட்டுப் பிரதேசத்துக்குரிய தனித்துவமான சிறப்பெனலாம்.

"நச்சரவு கச்சென அசைச்சுமதி
யுச்சி யின்மி லைச்சொரு கையான்
மெய்ச்சிர மணைச்சுலகி னிச்சமிடு
பிச்சையமர் பிச்சனிடமாம்"[11]

என்று திருஞானசம்பந்தர் சிவனின் பிச்சாடன திருக்கோலத்தைச் சிறப்பித்துள்ளார். தாருகாவன ரிஷிகளின் ஆணவத்தை அடக்கும் நோக்கில் ரிஷிபத்தினியர் காணும் வகையில் நிர்வாணமாக எழுந்தருளிய வடிவமே இதுவாகும். நச்சுப்பாம்பினை கச்சையாகவும் பிறைச்சந்திரனை தலையில் சூடிக்கொண்டவராகவும் கைகளில் கபாலமேந்தியவராகவும் காட்சியளிக்கும் கோலமே இதுவாகும். தோலாடை உடுத்துக் கொண்டு கபாலம் ஏந்தியவராக இவ்விறைவன் எழுந்தருளும் கோலத்தினைத் திருநாவுக்கரசர்,

" கறுத்ததொரு கண்டத்தார் காலன் வீழக்
குரலினாற் காய்த்துகந்த காபாலியார்
முறித்ததொரு தோலுடுத்து முண்டஞ் சாத்தி
முனிகணங்கள் புடைசூழ முற்றந்தோறுந்
தெறித்ததொரு வீணையராய்ச் செல்வார்..."[12]

என்று சிறப்பித்துள்ளார். இவ்வாறு சிவமூர்த்தங்களுள் சிறப்புப்பெறுகின்ற பிச்சாடன ருக்குக் கோயில் எடுப்பிக்கப்பட்டுள்ளமை சிறப்பிற்குரியதே. இவ்வாலயத்தினுள் பிச்சாடனர், பிள்ளையார், பூதம் ஆகியோரின் படிமங்கள் உள்ளன. ஆலயத்தின் முன்பக்கத்தில் கேணி அமைந்துள்ளது. இதன் வாயில்பகுதி ஆரம்பத்தில் மேற்கு நோக்கியவாறு அமைந்திருந்தன. ஆனால் இன்று வடக்கு நோக்கியவாறு திருப்பப்பட்டுள்ளது. இதன் முன்பகுதியில் ஒரே கல்லாலான நீர்த்தொட்டி ஒன்றும் காணப்படுகிறது. ஆவுரோஞ்சிக்கல் மற்றும் சுமைதாங்கிக்கற்கள் இருந்தமைக்கும் சான்றுகளுண்டு. இதனமைப்பினை நோக்குமிடத்து கால்நடைகள், வழிப்போக்கர்கள் தங்கி ஓய்வெடுக்கும் இடமாக இவ்விடம் காணப்பட்டிருத்தல் கூடும்.

## நிறைவாக

யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலயமானது யாழ்ப்பாணத்திலுள்ள சக்தி ஆலயங்களுள் ஒன்றாகக் காணப்படுகின்றது. நாட்டுப்புறத் தெய்வ வழிபாடொன்று சமஸ்கிருதப்படுகைக்குள் மாற்றம் பெற்ற தன்மையினை இவ்வாலயச் சூழலூடாகவும் இனங்காண முடிகிறது. மிகச்சிறியளவில்

காணப்பட்ட ஓர் ஆலயம் இன்று மிகப்பெரியளவில் மூடிய அமைப்பினையுடைய ஆலயமாகக் காணப்படுவது சிறப்பான அம்சமே. இந்தவகையில் இவ்வாலயமானது திருக்கோயிற்கட்டடக் கலையின் பரிணாம வளர்ச்சியினூடு ஓர் ஆலயம் கொண்டிருக்க வேண்டிய உறுப்புகளுடன் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாக உள்ளது.

### அடிக்குறிப்புகள்

1. வைத்திலிங்கன் செ.,1997, தமிழ்ப்பண்பாட்டு வரலாறு, ப.306,
2. மேலது, ப. 307
3. மேலது, ப,324
4. அருணாசலதேசிகர் , கா.,1960. சைவ சமய சிந்தாமணி, ப.22,
5. வைத்திலிங்கன், செ.1997,மு.கு.நூ.,பக் 336 - 340.
6. குமாரசுவாமிக்குருக்கள், ச.,1934, ஆலய அமைப்பு, ப.6.
7. அருணாசலதேசிகர். கா.,1960, மு.கு.நூ,ப.25.
8. வைத்திலிங்கன் செ.,1997,மு.கு.நூ.,பக்.336.
9. திருமந்திரம், பா.எ.1718.
10. பத்மநாதன், சி.,(ப.ஆ), 2009, இந்துக் கோயில்கள் கட்டடங்களும் சிற்பங்களும், ப,XIV
11. சம்பந்தர் தேவாரம், 3:67:11
12. அப்பர் தேவாரம், 6:58:6

### தகவலாளர்கள்

1. சிவஸ்ரீ சதா. மகாலிங்கசிவக்குருக்கள், வயது 75, நாயன்மார்கட்டு, 24.08.2020
2. சிவஸ்ரீ ம.பாலசதாசிவன் ஐயா, வயது 24, நாயன்மார்கட்டு, 05.09.2020

### உசாத்துணைகள்


1. பத்மநாதன், சி.,(ப.ஆ.)2009, இந்துக்கோயில்கள் கட்டடங்களும் சிற்பங்களும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
2. வைத்திலிங்கன், செ., 1997, தமிழ்ப்பண்பாட்டு வரலாறு, இரண்டாம் பாகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.
3. சொக்கலிங்கம், A.,2002, முதலாம், இரண்டாம் பாகங்கள், ஆலயங்களின் உட்பொருள்விளக்கம், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
4. கணேசலிங்கம்.செ. 2000 ,கலையும் சமுதாயமும், குமரன் பப்ளிகேஷன்ஸ், சென்னை.
5. அருணாசலதேசிகர், கா.,1960, சைவ சமய சிந்தாமணி, மட்டக்களப்புத் தமிழ்க் கலைமன்றம், மட்டக்களப்பு.
6. குமாரசுவாமிக்குருக்கள், ச.,1934, ஆலய அமைப்பு, ஞான சித்தியந்திரசாலை, வதிரி.
7. கந்தையா, மு.,1986, சிவாலய சேவை ஏன்? எப்படி?, சைவ சமய அபிவிருத்திச் சங்கம், ஏழாலை மேற்கு, சுன்னாகம்.
8. யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலய சித்திரத் தேர்மலர், 2006, ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலயப் பரிபாலன சபை, திருப்பணிச்சபை, நாயன்மார்கட்டு.